பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: பங்குனி 12 (25—3—68) திங்கள் ★ வெளியூர்: பங்குனி 13 (26—3—68) செவ்வாய் [இதழ்: 236

# இந்தி எதிர்ப்புத் தியாகிகள் குடும்பங்களுக்கு நிதியுதவி

## அரசு ஆராய்வதாக முதலமைச்சர் அண்ணா அறிவிப்பு

### இறந்தவர்களின் உண்மையான கணக்கு அறிய அரசுக்குத் தகவல் தரலாம்

சென்னை, மார்ச் 25—

**"1965-ம் ஆண்டில் நிகழ்ந்த இந்தி எதிர்ப்பின்போது போலீசுத் துப்பாக்கிச் சூட்டால் உயிரிழந்த மாணவர் குடும்பங்களுக்கு கருணை நடவடிக்கையாக இழப்பு ஈடு வழங்குவது குறித்து அரசு யோசித்து வருகிறது"**

என்று, இன்று சட்டமன்றத்தில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்தார்கள்.

ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அண்ணா அவர்கள் இத்தகவலை அறிவித்தார்கள்.

மேலும் கேட்கப்பட்ட துணைக் கேள்விகளும், அண்ணா அளித்த விடைகளும் வருமாறு:—

சிவசுப்பிரமணியம்:— "எவ்வளவு தொகை கொடுக்கப்படும்?"

அண்ணா:— "யோசனையில் தொகையும் அடங்கும்."

பொன்னுமலை:— "1965-ல் எத்தனை இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது—எத்தனைப் பேர் இறந்தார்கள் என்ற விவரம் சேகரிக்கப்படுமா?"

அண்ணா:— "அந்த விவரமெல்லாம் சேகரிக்கப்படுவதாலே எந்தவிதப் பலனும் ஏற்படாது."

கே. ஆர். நல்லசிவம்:— "பொள்ளாச்சியிலே 8-பேர் இறந்ததாக அரசாங்கம் அறிவித்தது; ஆனால் 80-பேர்வரை அங்கே இறந்ததாகக் கூறப்படுகிறது. அதேபோல், சென்னிமலையில் 6-பேர் இறந்தார்கள்; ஆனால் இரண்டுபேர்தான் இறந்ததாக அரசு தெரிவித்தது; எனவே, எத்தனைப் பேர் உண்மையாக இறந்தார்கள் என்ற விவரத்தைச் சேகரித்து அறிவிக்க இந்த அரசு முன்வருமா?"

அண்ணா:— "அந்தந்தப் பகுதியில் உள்ள அதிகாரிகளால் அனுப்பப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே இறந்தவர்கள் கணக்கு அரசினரால் அறிவிக்கப்பட்டது. அந்தக் கணக்குச் சரியில்லை என்றால்—சரியான தகவல்களைக் கொடுத்தால்—ஏற்றுக் கொள்ளப்படும். யார் யார் எந்தெந்தப் பகுதியில் இறந்திருக்கக்கூடும் — 'பொள்ளாச்சியில் இன்ன வீதியிலே—சோமசுந்தரத்தின் மகன் சின்னச்சாமி என்பவனைக் காணோம்; அவன் துப்பாக்கிச் சூட்டினால் இறந்திருக்க வேண்டும்' என்பது போன்ற குறிப்பான தகவல்களை கனம் உறுப்பினர்கள் தந்தால், அதுபற்றி அதிகாரிகளை அனுப்பி விசாரிக்கச் செய்து, அது உண்மைதான் என்றால் ஏற்றுக்கொள்ளப்படும். இப்படி ஆங்காங்கே எத்தனைப் பேர் இறந்திருக்கக் கூடும் என்பதை அரசுக்குத் தெரிவித்தால் உண்மையான தகவலைத் திரட்டி அறிவிக்க முடியும்."

அண்ணா அவர்கள் மேலும் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"இந்தி எதிர்ப்பில் உயிர் நீத்த தியாகிகளின் குடும்பங்களுக்கு நிதி உதவியளிப்பது பற்றி யோசிக்கப்படும் என்பதிலிருந்து, 'தொடர்புடைய எல்லாப் பிரச்சினைகளும் ஆராயப்படும்' என்பதை உணரலாம். யார் யார் எங்கெங்கே இறந்தார்கள்—யார் யார் உறுப்புக்களை இழந்தார்கள் —அவர்களுடைய குடும்பங்கள் பொருளாதாரத் துறையில் எந்த நிலையில் உள்ளன—அவர்கள் சம்பாதித்துத்தான் குடும்பம் நடத்தக்கூடிய நிலையில் அந்தக் குடும்பம் இருந்ததா—வேறு வசதிகள் உள்ளனவா—யாருக்கு எந்த அளவுக்கு உதவி தேவை—என்பனவற்றையெல்லாம் அரசு ஆராய்ந்துதான் முடிவு செய்யும்."

## போக்குவரத்து வளர்ச்சிக்கு!

சென்னை, மார்ச் 24—

சென்னை நகரும் அதன் சில சுற்றுப்புறப் பகுதிகளும் சேர்ந்த சென்னை மெட்ரோபாலிடன் பகுதியில் போக்குவரத்து வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு திட்டக் குழு சிபாரிசு செய்திருக்கிறது'

# 'விவித பாரதி' இந்தி ஒலிபரப்புக்கு எதிர்ப்பு!

## டில்லியிலும் ஆகாஷ்வாணியை ஒழிக்க வற்புறுத்தல்

### சட்டமன்றத்தில் முதலமைச்சர் அண்ணா தகவல்

சென்னை, மார்ச் 25—

"அனைத்திந்திய வானொலியினால் 'விவித பாரதி' இந்தி நிகழ்ச்சி ஒலிபரப்பப்படுவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தத் தமிழக மாணவர் இந்தி எதிர்ப்புக் குழு முடிவெடுத்துள்ளதை அரசு அறியும்; அதனைக் கைவிட வேண்டும் என்று அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், இன்று சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

பெ. மலைச்சாமி:— "சென்னையிலிருந்து ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளில், 'மதராஸ் வானொலி நிலையம்' என்றும், டில்லியிலிருந்து ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளில், 'ஆகாஷ் வாணி' என்றும் கூறப்படுவது அரசுக்குத் தெரியுமா? டில்லி வானொலியிலும், 'ஆகாஷ் வாணி' என்பதை மாற்ற இந்த அரசு முயற்சி செய்யுமா?"

அண்ணா:— "மற்றொரு கிளர்ச்சிக்கு வழிகோலாத வகையில், 'வானொலி' என்று மாற்றுமாறு இந்த அரசு வற்புறுத்தி வருகிறது."

# காங்கிரசு உறுப்பினர் மீதான உரிமைப் பிரச்சினை

## வருத்தம் தெரிவித்துக் கடிதம் எழுதியதால் விட்டுவிடப்பட்டது

சென்னை, மார்ச் 25—

காங்கிரசுக் கட்சி உறுப்பினரான திரு. வி. ஜார்ஜ், கடந்த பிப்ரவரி 14-ஆம் நாளன்று சட்டமன்றத்தில், அவைத் தலைவர்மீது ஒருதலைக் குற்றஞ்சாட்டி அவையின் உரிமையை மீறியதாக ஏற்பட்ட வழக்குத் தொடர்பான அறிக்கையை, சட்டமன்ற உரிமை ஆய்வுக் குழுத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்களால் இன்று சட்டமன்றத்தில் அளிக்கப்பட்டது; அவ்வறிக்கையில் பின்வருமாறு முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது:—

"இக்குழு தனக்கு அனுப்பப்பட்ட உரிமைப் பிரச்சினையின் பொருளையும், இந்த நேர்வின் விவரங்கள் அடங்கிய குறிப்பையும், இதுபற்றிய சட்டத்தையும் மரபையும் நன்கு சிந்தித்தது.

"குறிப்பிட்ட உறுப்பினர் ஒருவர் துணை வினா கேட்க எழுந்து நின்றபோது, 'மாண்புமிகு பேரவைத் தலைவர் வேண்டுமென்றே அவரைப் புறக்கணித்தார்' என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ஜார்ஜ் கூறியது, 'பேரவைத் தலைவர் ஒருபக்கச் சார்புடையவர்' என்று நோக்கம் கற்பிப்பதாகும் எனவும், எனவே, அவ்வாறு செப்பியது இப்பேரவையின் உரிமையை மீறுவதாகும் எனவும் இக்குழு முடிவு செய்தது.

"எனினும் மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ஜார்ஜ் தன் வருத்தத்தைக் கடித வாயிலாக மாண்புமிகு பேரவைத் தலைவருக்குத் தெரிவித்துள்ளதால், அவரின் வருத்த மொழியை ஏற்றுக் கொண்டு இத்துடன் விட்டு விடலாமெனப் பேரவைக்குப் பரிவுரை செய்வதென இக்குழு முடிவெடுத்தது."

# அமைச்சர் மாறு வேடம் பூணுவாரா?

சென்ற ஆண்டு, கோவையில் தாம் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தபோது அங்குள்ள அரிசிப் பங்கீட்டுக் கடைகளுக்குத் திடீரென்று சென்று சோதனையிட்டதாக உணவுத்துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் இன்று சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

"அமைச்சர் அவர்கள், தம்மை அடையாளம் கண்டுகொள்ளாமலிருக்க மாறு வேடம் பூண்டு திடீர்ச் சோதனை செய்வாரா?"

என்று, சுதந்தரக் கட்சி உறுப்பினர் திரு. சீமைச்சாமி கேட்டார்.

"மாறுவேடம் போடவேண்டிய அவசியத்தில் நானோ, இந்த அரசோ இல்லை; எதையும் நேரடியாகவே செய்வோம்"

என்று அமைச்சர் மதியழகன் பதிலளித்தார்.

# நடைபாதையில் வசிப்பவர்கட்கு மாற்றுக் குடியிருப்பு

## இதுவரை 1499 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன

சென்னை, மார்ச் 25—

"1962-ம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்காயத்தின்படி, சென்னை மாநகரில் மொத்தம் 3,379 குடும்பங்கள் நடைபாதையில் வசிப்பதாக அறியப்பட்டது.' இப்போது 1,499 குடும்பங்கட்கு வேறு இடத்தில் வீடு கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது; மேலும், சேரிச் சீர்திருத்தத் திட்டங்களின்கீழ் நடைபாதைவாசிகளுக்கு மாற்று வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன"

என்று இன்று சட்டமன்றத்தில், தொழிலாளர் துறை அமைச்சர் திரு. செ. மாதவன் தெரிவித்தார்.

மேலும் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்ததாவது:—

"நடைபாதை வாசிகளுக்கு மாற்று வசதி செய்யவும், குடிசைவாசிகளுக்கு மாற்று வசதிகள் செய்யவும் ஏராளமான திட்டங்கள் தீட்டப்பட்டுக் கைவசமுள்ளன. பணப் பற்றுக் குறையின் காரணமாகத்தான் அவற்றை நிறைவேற்ற இயலவில்லை. பணவசதி கிடைக்கும் போதெல்லாம், அவ்வப்போது இத்திட்டங்களை நிறைவேற்ற அரசு முனையும்.

"நடைபாதைவாசிகளுக்கு மாற்றுக் குடியிருப்பு வசதி செய்து அளிக்கும் திட்டம் முழு வெற்றி பெற முடியாததற்கு உள்ள காரணம், அவரவர் வேலை செய்யும் தொழிற்சாலைகளுக்கு அருகில் வீடுகட்டிக் கொடுக்க இடம் கிடைக்காததுதான்."

# காரமடை அருகில் மாணவர்கள் நடத்திய இந்தி எதிர்ப்பு

## மாண்டவர் குடும்பங்களுக்கு இன்சூரன்சு நிறுவனத்தின் மூலம் இழப்பு ஈடு

### சட்டமன்றக் கேள்விகளுக்கு அண்ணா அளித்த விடைகள்

சென்னை, மார்ச் 25—

12—1—68ல் கோவை மாவட்டம் காரமடையிலிருந்து ஆறு கல் தொலைவில் உள்ள கிராமத்தில் மாணவர்கள், ஓடிக்கொண்டிருந்த வாகனங்களை நிறுத்தி இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடத்திக் கொண்டிருந்தபோது, ஒரு தனியார் பஸ்ஸை நிறுத்த முனைந்த நேரத்தில், 'அந்தப் பஸ் ஓட்டுநர் மாணவர்களைத் தவிர்ப்பதற்காக வேறுதிசையில் திருப்பி பஸ்ஸை ஓட்டியபோது, அதில் 4 மாணவர்கள் மோதுண்டு காயமடைந்தனர்; அவர்களில் இருவர் இறந்தனர்; என்ற தகவலை, முதலமைச்சர் அண்ணா அவர்கள் இன்று சட்டமன்றத்தில், ஒரு கேள்விக்குப் பதிலளிங்கையில் தெரிவித்தார்.

துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அண்ணா அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:—

"அந்தப் பஸ்ஸை மாணவர்கள் நிறுத்தும்போது, பஸ் ஓட்டுநர் நிறுத்தாமல் ஓட்டியதாகக் கருதுவது தவறு. மாணவர்கள் வந்து வழிமறைத்து நிறுத்துவதைத் தவிர்ப்பதற்காக அந்த ஓட்டுநர் வேறு திசையில் பஸ்ஸைத் திருப்பும் போதுதான், திருப்பமுடியாத நிலை ஏற்பட்டு மாணவர்கள்மீது பஸ் ஏறியிருக்கிறது. விபத்து நடக்காமல் இருப்பதற்குத்தான் அந்த பஸ் ஓட்டுநர் முயன்றிருக்கிறார். விபத்து நடந்த இடம் காரமடையல்ல; காரமடையிலிருந்து மாணவர்கள் புறப்பட்டு வழி நெடுகிலும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடத்திக்கொண்டே சென்றார்கள்; ஆறாவது மைலில் உள்ள ஒரு குக்கிராமத்தில்தான் இந்த விபத்து நடந்திருக்கிறது. 'விபத்து' என்பதே எதிர்பாராமல் நிகழ்வதுதான்; எனவே, 'இப்படி நடக்கும்' என்று முன்கூட்டியே எதிர்பார்த்து அங்கு போலீசுப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்வது எந்த அரசினாலும் இயலாத காரியம். 'முன் கூட்டி அறிவது என்பது ஜோதிடரால் முடியும்' என்று கூறினாலும், அப்படிப்பட்ட ஜோதிடர்கள் இப்போது இருக்கிறார்களா என்பது எனக்குத் தெரியாது.

"இப்படிப்பட்ட கிளர்ச்சிகளைத் தூண்டிவிடாதிருக்க அரசு முயற்சி செய்யுமா' என்று நண்பர் விநாயகம் கேட்டார்; அந்த முயற்சிக்கு அரசுடன் ஒத்துழைக்கும்படி அவரை அழைக்கிறேன்.

"இப்படிப் பஸ்ஸை நிறுத்தி, அதனாலே இறப்பவர்களுக்கு இழப்பு ஈடு தரும் வழக்கமில்லை. அந்தப் பஸ்ஸுக்குச் சொந்தக்காரர்கள், இன்சூரன்சு நிறுவனத்தின்மூலம் இழப்பு ஈடு பெற்றுத் தந்திருப்பதாகவோ, தருவதற்கு ஆவன செய்துவருவதாகவோ தகவல் கிடைத்துள்ளது."

ஒரு காங்கிரசு உறுப்பினர்:— "இப்போது கார், பஸ் சொந்தக்காரர்களெல்லாம் தங்கள் கார்களைப் பாதுகாத்துக்கொள்ள, காரில், 'இந்தி ஒழிக—தமிழ் வாழ்க' என்று எழுதி ஒட்டிக் கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படிச் செய்வதன்மூலமே கார்களைப் பாதுகாத்துக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டிருப்பது தெரியுமா?"

அண்ணா:— "தங்கள் கார்களைப் பாதுகாத்துக்கொள்ளச் சிலர் அப்படிச் செய்கிறார்கள்; வேறு சிலர், தங்கள் இலட்சியத்தைப் பிறருக்கும் அறிவிப்பதற்காக, 'இந்தி ஒழிக—தமிழ் வாழ்க' என்று தாங்களாகவே எழுதி ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள்."

# 'ஒரே உலகம்' நோக்கி முயலாமலே முன்னேறுகிறோம்!

## ஆங்கிலத்தின் இடத்தை நிரப்பும் தகுதி தமிழுக்கே உண்டு!

## தமிழ் பாட மொழியாவதால் ஆங்கிலத்தின் தரம் குறைய விடமாட்டோம்!

**பச்சையப்பன் கல்லூரியில் அண்ணா விளக்கவுரை**

சென்னை, மார்ச் 23—

"தமிழைப் பாடமொழியாக்குவதில் புதிய அரசு முழுமூச்சுடன் முனைந்து நிற்கிறது! அதில் வெற்றியும் பெறும்!

"தமிழ் பாட மொழியான பிறகும், 'இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஆங்கிலத்தின் தரம், தமிழ்நாட்டில் தான் முதல்தரமாக இருக்கிறது' என்ற பெரும் புகழை நிச்சயம் நிலைநாட்டுவோம்; ஏனெனில், உலகம் இன்று வேகமாக ஒன்றுபட்டுவருகிறது; உலகின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்ல முடிகிறது. ஒரு பகுதியின் கருத்து வேகமாக மறுபகுதிக்குப் பரவுகிறது.

"வெண்டல் வில்கி எனும் பேராசிரியர் சொன்ன 'ஒரே உலக'த்தை நோக்கி நாம் முயலாமலேயே முன்னேறிக்கொண்டிருக்கிறோம்; ஆகவே ஆங்கிலத்தின் மூலமே அந்த உலகத் தொடர்பை நாம் பெறமுடியும்!

"இப்போது அந்த ஆங்கிலத்தின் இடத்தை நமது நாட்டில் பெறும் தகுதியுள்ளது எந்த மொழி? நாடாளுமன்றத்தில்—நீதிமன்றத்தில் ஆங்கிலத்தின் இடத்தைப் பெறும் தகுதியும் திறனும், வளமும் மிக்க மொழி இந்தியாவிலேயே தமிழ் மொழி ஒன்றுதான்! இதை நான் 'தமிழன்' என்பதால் கூறவில்லை; தமிழின் பெருமையை உணர்ந்தவர்கள் அதை ஒப்புக்கொள்வார்கள்; ஏனெனில், இந்தி மொழியில் அந்த அளவுக்குத் தனிச் சொற்கள் குறைவு!"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், பச்சையப்பன் கல்லூரியில் உரையாற்றுகையில் தெரிவித்தார்கள்.

பச்சையப்பன் அறநிலையத்தின் 120-ஆவது ஆண்டு விழா நேற்று மாலை பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்றது. டாக்டர் ஏ. வேணுகோபால் அனைவரையும் வரவேற்றார்; செட்டிநாட்டரசர் திரு. முத்தையா (செட்டியார்) விழா மலரை வெளியிட்டு உரையாற்றினர்.

### தூங்கி எழுந்து வரும் மயக்கம் போன்றது அது!

அண்ணா அவர்கள் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:—

"இன்றையத்தினம் தமிழுக்கு ஒரு குறையும் இல்லை; ஏற்கனவே அது வளர்ந்திருக்க வேண்டிய அளவுக்கு வளர்ந்திருக்கிறது. இருக்கிற குறையெல்லாம், தமிழின் அளவுக்கு நாம் உயர்ந்திருக்கிறோமா என்பதுதான்!

'உயர் தனிச் செம்மொழியான ஒரு மொழியை—வன்மையும் மென்மையும் பெற்றிருக்கின்ற ஒரு மொழியை நாம் பெற்றிருக்கிறோம்; அந்த மொழியின் பெருமையைக்கூட நாம் எவ்வளவு காலம் கழித்து உணர்ந்தோம்' என்பதையும் இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

படிக்கும்போதே தமிழார்வம் மிக்கவர்கள், படிப்பை முடித்து வெளியே சென்று பணியாற்றத் துவங்கும்போதும் தமிழ் உணர்வோடு இருந்தார்கள் என்றால், நிச்சயம் இப்போதைக்கு இருப்பதைவிடத் தமிழின் ஆக்கம் பெருகும்!

தமிழ்ப்பற்று மிக்கவர்கள் பொறியர்களாக வந்த பிறகுதான், 'ஹைரோடு'கள், 'நெடுஞ்சாலை' என்ற அழகுத் தமிழ்ப் பெயரில் அழைக்கப்படுகின்றன! இல்லையென்றால், 'ஹைரோடு' என்ற ஆங்கிலச் சொல், தமிழ் வரி வடிவத்தில் இருக்கும்!

'பாட மொழி தமிழில் முடியுமா' என்பது, துவக்கத்தில் கொஞ்சம் மயக்கம் தருவதுதான்! அது, தூங்கி எழுந்ததும் வரும் மயக்கம் போன்றது!

தூங்கி எழுந்ததும் ஆயாசமும், 'அப்பாடா' என்ற சோர்வும், கொட்டாவி விடுவதுப்போலத்தான், பல்லாண்டுகளாய் வேறு மயக்கத்தில் இருந்த நாம், 'தமிழால் முடியுமா' என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்!

### நீண்டகாலப் பழக்கத்தின் விளைவுதான் அது!

'ஆங்கிலத்தைப் புறக்கணிக்கக் கூடாது' என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்; ஆனால் ஆங்கிலத்தைப் பாட மொழியாக வைத்துக் கொண்டால்தான் ஆங்கில அறிவைப் பெற முடியும் என்பதிலிருந்து நான் மாறுபடுகிறேன்.

ஆங்கிலத்தைச் சிறப்புப் பாடமாக ஏற்றுப் படித்தாலே அந்த மொழியில் போதிய அறிவு பெற முடியும். பாட மொழியாக இருந்துதான் அறிவு பெற முடியும் என்பதை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன்.

கணக்குப் பாடத்தை ஆங்கிலத்தில் படிப்பதால் மட்டுமே ஆங்கில நடை அழகைப் பெற முடியுமா? பூகோளப் பாடத்தை ஆங்கிலத்தில் படிப்பதால் மட்டுமே போதுமான ஆங்கில அறிவு பெற்றுவிட முடியுமா?

'வெறும் தகவல் அறிவு பெறுவதால் மொழி அறிவு வளர்ந்துவிடாது' என்று நினைப்பது, நீண்ட காலப் பழக்கத்தின் காரணமே தவிர வேறல்ல!

### அதை நினைத்துக் கொண்டா இப்போது பேசுவது?

தமிழ் மீதான ஆர்வம், ஆங்கில அறிவின் வீழ்ச்சியாக இருக்கக் கூடாது என்பதை ஒப்புக்கொள்கிறேன்; 'நிலைமை அப்படி இல்லை' என்பதையும் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்றத்தில், 'ஆங்கிலத்தை விட்டுவிடாதீர்கள்' என்று என்னிடம் வேண்டுகோள் விடுக்கிறார்கள்; ஆனால், 20—30 ஆண்டுகளுக்குமுன், 'ஆங்கிலம் படிப்பதே தேசத்துரோகம்' என்று பேசப்பட்டது; அது, ஆங்கில வெறுப்பாகவே மாறியது! அதை நினைத்துக் கொண்டுதான் இப்போது பேசுகிறார்கள்!

### அர்த்தமென்ன அதற்கு?

தமிழில் 'பட்ஜெட்' என்பதற்கு, 'நிதி நிலை அறிக்கை' என்று நெடுங்காலத்திற்கு முன்பே பெயரிட்டிருக்கிறோம்.

'பட்ஜெட்' என்பதற்குரிய முழுப் பொருள், 'பட்ஜெட்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இல்லை!

'பட்ஜெட்' என்பது, அந்தக் காகிதங்கள் உள்ள பெட்டியைத்தான் குறிக்கும்!

ஆனால் நிதி நிலை அறிக்கை என்றால், 'மாநிலத்தின் நிதி எவ்வளவு—அது எந்த நிலையில் இருக்கிறது—அதை அமைச்சர் எப்படி அறிக்கையாகத் தருகிறார்' என்பதையெல்லாம் எடுத்துச் அந்தச் சொல் காட்டுகிறது!

### நிகர் ஏது இதற்கு?

யார் பேசுவதில் எவ்வளவு இன்பம் இருந்தாலும், தாய் நம்மை, 'வாடா, மகனே' என்று கூறும்போது ஏற்படும் இன்பத்திற்கு நிகரில்லை! அதுபோல். தாய் மொழியின் இன்பத்திற்கு--பயனுக்கு நிகர் எதுவுமில்லை!

### எப்படி இருந்தவர்கள் நாம்--- எவ்வாறு விழ்ந்தோம்!

தமிழர்கள் முதலில்உலகத்தோடு தொடர்பு கொண்டிருந்தனர்! அதனால்தான், பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்று கூறினார்கள்!

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றார்கள்! 'நல்லதும் தீதும் பிறர் தர வாரா' என்றார்கள்!

சீர்திருத்தவாதிகளே வெளியே கூற அஞ்சும் 'ஒன்றே குலம் -- ஒருவனே தேவன்' என்கிறார்கள்!

அவ்வளவு உரிர்ந்த இடத்தில் நாம் இருந்தோம்! என்ன காரணமோ--கீழே விழ்ந்தோம்! கீழே விழ்ந்ததால் கீழ் நோக்கிப் போய்விடவில்லை! மேலேயே பார்த்துக் கொண்டிருக்கிறோம்!

'மேலே வேகமாக ஏறுங்கள்' என்கிறார்கள் சிலர்! நாங்களோ, காலை ஊன்றி வழுக்காதவாறு முன்னேற விரும்புகிறோம்!

நான்கு அடிகள் ஏறி எட்டு அடிகள் கீழே சறுக்கி வீழ்வதில் பயனில்லை! படிப்படியாக--உறுதியாக முன்னேற வேண்டும்! இதுவே நமது கொள்கை!"

---

## டி. டி. கே. கட்டுரை-- மாஸ்கோவில் எதிரொலி

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழின் சோவியத் நிருபர் சில நாட்களுக்கு முன் எழுதியிருந்த 'மாஸ்கோ கடிதம்' என்ற கட்டுரைக்குப் பின் சேர்க்கையாக, முன்னாள் மத்திய நிதியமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி, மற்றொரு கட்டுரை எழுதியிருந்தார்.

இந்தியா - சோவியத் யூனியன் ஆகிய இரு நாடுகளிடையேயும் நிலவிவரும்—இருந்து வரவேண்டிய நட்புறவு பற்றி அக்கட்டுரையில் அவர் வலியுறுத்தியிருந்தார்; முக்கிய நேரங்களின்போது இந்தியாவுக்கு இரஷ்யா உதவியிருப்பது பற்றியும், தந்துள்ள ஆதரவுகள் பற்றியும் அதில் டி.டி.கே. விளக்கியிருந்தார்.

இதைப் பாராட்டும் வகையில் 'லைப் அப்ராட்' என்ற சோவியத் ஏடு மற்றொரு கட்டுரை எழுதியுள்ளது.

### வாழ்க்கைச் செலவுப் புள்ளி

மார்ச் 16-ந் தேதியுடன் முடிந்த வாரத்தில், சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினருக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி ஒன்று உயர்ந்து 701-ல் நின்றது.

இறைச்சி, தேங்காய், புளி, நல்லெண்ணெய் ஆகியவற்றின் விலை உயர்வே இதற்குக் காரணம்.

பிப்ரவரி மாதத்தில் பல்வேறு இடங்களில் குறைந்த வருமானக்காரர்களுக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளிவிவரம் வருமாறு:— கடலூர் 755; திருச்சி 674; மதுரை 639; கோவை 750; நாகர்கோவில் 768.

---

## அறிஞர் அண்ணா மேற்கொள்ளும் உலகச் சுற்றுப்பயண விவரம்

ஏப்ரல் 15-ம் நாள் பிற்பகல் 2-30 மணிக்கு சென்னையிலிருந்து விமானமூலம் புறப்பட்டுப் பம்பாய் வழியாக இத்தாலி நாட்டுத் தலைநகரான ரோம் நகருக்குச் செல்கிறார்.

ஏப்ரல் 16-ம் நாள் ரோம் நகரில் தங்கியிருக்கையில் வாடிகன் நகருக்கும் மற்றும் பல இடங்களுக்கும் செல்லக்கூடும்.

ஏப்ரல் 17, 18-ம் நாட்களில் பிரான்சு நாட்டுத் தலைநகரான பாரிஸ் நகரில் தங்குகிறார்; மோட்டார் தொழிற்சாலைகளைப் பார்வையிடுவார்.

ஏப்ரல் 19-ம் நாள் புறப்பட்டு, மறுநாள் நியூயார்க் நகரை அடைவார்; ஏப். 29-ம் நாள்வரை நியூயார்க், அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டன், நியூஹெவன் முதலிய நகரங்களில் சுற்றுப் பயணம் செய்வார்.

நியூஹெவனில் ஏப். 22-ம் நாள் முதல் 29-ம் நாள்வரையில் 'யேல்' பல்கலைக் கழகத்தில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்; அங்கு அண்ணா அவர்களுக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கப்படும்; இந்தப் பட்டம், உலகில் மிகப் புகழ்பெற்ற பெரும் தலைவர்களுக்கு வழங்கப்படுவதாகும்.

நியூஹெவனில் அவர் தங்கியிருக்கையில், பண்ணைகள்—தொழிற்சாலைகள் ஆகியவற்றைப் பார்வையிடுவார்.

ஏப்ரல் 20-ம் நாள் 'போர்ட்டோரிகோ' என்ற சிறிய நகருக்குச் செல்வார்; ஏழ்மையான ஒரு நாடு, தொழில் வளர்ச்சி மூலம் எப்படி முன்னேற முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது இந்த நகரம்; இந்த நகரில் முதலமைச்சர் அண்ணா அவர்கள், கரும்புச் சாகுபடி—சர்க்கரை உற்பத்தி முறைகள் பற்றி ஆராய்வார்.

ஏப்ரல் 30-ம் நாள், 'கான்சாஸ்' என்ற நகருக்குச் செல்கிறார்; அங்கு விவசாயப் பண்ணைகளைக் காண்பார்; மன்ஹாட்டன் விவசாயப் பல்கலைக் கழகத்திற்கும் செல்வார்.

மே 1-ம் நாள் அறிஞர் அண்ணா அவர்கள், லாஸ் ஏஞ்சல்ஸ் (ஆலிவுட்) நகரில் இருப்பார்; அங்கு அவர் மூன்று நாட்கள் தங்குவார்; அங்குள்ள பண்ணைகளையும், தொழிற்சாலைகளையும் காண்பார்; ஆலிவுட் நகருக்குச் சென்று உலகப் புகழ்பெற்ற திரைப் பட நிலையங்களையும், பழத் தோட்டங்களையும் சுற்றிப் பார்வையிடுவார்.

மே 4-ம் நாள், சான்பிரான்சிஸ்கோ நகருக்குச் செல்கிறார்; அன்று அவர் அங்கு தங்கியிருப்பார்.

மே 5-ம் நாள் ஹவாய் (ஹானலூலு) தீவுக்குச் செல்கிறார்.

மே 6-ம் நாள், ஜப்பான் தலைநகரான டோக்கியோவுக்குச் செல்கிறார்; அங்கு அவர் ஐந்து நாட்கள் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு தொழில் வளங்களைக் காண்பார்.

ஜப்பான் சுற்றுப்பயணம் முடிந்த பின்பு அவர் பாங்காக் (தாய்லாந்து), சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் செல்கிறார்.

சுற்றுப்பயணம் முடிந்து மே 15-ம் நாள் சென்னை திரும்பக் கூடும்.

முதலமைச்சர் அண்ணா அவர்களுடன், அவருடைய தனிச் செயலாளர் கே. சொக்கலிங்கமும் செல்கிறார்.

---

## கச்சத் தீவு-- சீனாவின் அக்கறை

### 'செங்கொடி'யின் புதிய செய்தி

"கச்சத் தீவு இந்தியாவுக்கே சொந்தம் — என்பதற்கான குறிப்பேடுகளைப் பெறும் முயற்சியில், புதுடில்லி மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது"

என்று, பீகிங் நகரத்து அதிகார பூர்வமான வார ஏடான 'செங்கொடி', செய்தி ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

"இலங்கைக்குச் சொந்தமான தீவுகள் என்னென்ன என்று விக்டோரியா மகாராணி அப்போது விடுத்த அறிவிப்பு ஒன்றில், 'கச்சத் தீவு' என்ற பெயரே இல்லை; இது ஒன்றே, 'இத்தீவு இலங்கைக்குச் சொந்தமன்று என்பதற்குப் போதுமான ஆதாரமாகும்' என்ற வகையில், அந்த அறிவிப்புக்கான ஆதாரங்களைத் தேடுவதற்காக இலங்கையிலுள்ள இந்திய தூதுவரகம் பலத்த முயற்சி செய்துவருகிறது"

என்றும் குறிப்பிட்டு, 'செங்கொடி' எழுதியிருக்கிறது.

"நீண்ட நெடுங்காலமாக இலங்கை அரசின் அமைச்சுத் துறையின் செயலாளராக இருந்து வந்திருக்கும் 'பெர்கிஸ்' என்பவரின் துணையை இந்தியத் தூதுவரகம் நாடியது; அவரும் அதற்குச் சம்மதித்து, தொடர்புள்ள குறிப்பேடுகளை 'அபகரிக்க' முயற்சிக்கும்போது இலங்கை அரசின் வெளிவிவகார இலாகா 'விழித்து'க்கொண்டது; எனவே, அந்த முயற்சியைக் கைவிட்டு, இராணியின் அறிவிப்புப்பற்றிய குறிப்பேட்டினை இங்கிலாந்திலிருந்தே கேட்டுப் பெறும் முயற்சியில் இந்திய அரசு இறங்கியிருக்கிறது"

என்றும் செஞ்சீனத்தின் 'செங்கொடி' ஏடு எழுதியிருக்கிறது.

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவரகம் இதனை, 'வெறும் வேடிக்கைக் கதை' என்று கூறி மறுப்புரைத்துள்ளது.

---

## 'பஸ் ரூட்'கள் ஏலத்தில் விடப்படுமா?

சென்னை, மார்ச் 22—

"பேருந்து வழித்தடங்களுக்கு உரிமம் வழங்குவதற்குப் பதிலாக வழித்தடங்களை ஏலத்துக்கு விடுவதுபற்றி அரசு ஆய்வு செய்யுமா?"

என்று சட்டமன்றத்தில், சமக உறுப்பினர் எஸ். இராமச்சந்திரன் கேட்டார்.

அதற்குப் பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"அப்படிப்பட்ட எண்ணமும் ஆசையும் இந்த அரசுக்கு உண்டு; ஆனால் அதற்குச் சட்டம் இடந்தராது; மத்திய அரசு மூலம்தான் உரிய சட்டம் இயற்ற முடியும்."

---

## அரசு ஊழியர்கட்கு ஜி. டி. நாயுடு வீடு?

சென்னை, மார்ச் 22—

"அரசு ஊழியர்களின் அகவிலைப்படி உயர்த்தப்படும்போதெல்லாம், வீட்டு வாடகையும் வீட்டுச் சொந்தக்காரர்களால் உயர்த்தப்பட்டுவருவதால், அரசு ஊழியர்களுக்கு ஜி. டி. நாயுடு அவர்களால் கட்டப்படும் மலிவு விலை வீடுகளைக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?"

என்று சட்டமன்றத்தில் கழக உறுப்பினர் வீரமணி கேட்டார்.

"இதுபற்றி நான், ஜி. டி. நாயுடு அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தேன்; இன்னும் ஓராண்டுக்குப் பிறகுதான் அப்படிப்பட்ட வீடுகளைத் தம்மால் கட்டிக் கொடுக்க முடியும் என்று அவர் கூறிவிட்டார்.

என, முதலமைச்சர் அண்ணா அவர்கள் பதிலளித்தார்.

[illegible] வெளியிடப்படுகிறது.

# சலவைத் தொழிலாளர்களுக்குத் தி. மு. க. ஆட்சி வழங்கும் சலுகை

## த. நா. ச. தொ. மு. சங்கம் வரவேற்பு

"தி. மு. க. ஆட்சியில் சலவைத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடைக்கவில்லை என்று காங்கிரசுக்காரர்களால் பொய்ப் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டு வருகையின் இப்பொழுது சலவைத் தொழிலாளர்களுக்கு ஒரு பெரிய சலுகையை தி. மு. க. ஆட்சியில் அளித்திருக்கிறார்கள்.

20 ஆண்டுக்காலமாக ஆட்சி நடத்திவந்த காங்கிரசு ஆட்சியில் சலவைத் தொழிற் கருவிகள் கடனாகக் கொடுக்கப்பட்டு, 'அந்தக் கடனைத் திருப்பித் தரவில்லை' எனக் கூறி, ஏழைச் சலவைத் தொழிலாளர்களின் வீடுகளில் உள்ள குடும்பச் சாமான்களைப் பறிமுதல் செய்துகொண்டு வந்தார்கள்; இதனால் பல மாவட்டங்களிலுள்ள ஆயிரக்கணக்கான சலவைத் தொழிலாளர்கள் வேதனையுற்றனர். இதுபற்றி பல மாவட்டங்களிலிருந்து தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்திற்குப் பல கடிதங்கள் வந்ததன் காரணமாக 5—1—68, 6—1—68 ஆகிய நாட்களில் நடந்த சங்கத்தின் பொது உறுப்பினர் கூட்டத்தில் பரிசீலனை செய்து கீழ்க்கண்ட முறையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:—

"காங்கிரசு ஆட்சியில் சலவைத் தொழிலாளர்களுக்குச் சலவைக் கருவிகள் வாங்கக் கடனாக வழங்கப்பட்ட தொகையைத் திருப்பித் தரவில்லையெனக் கூறி ஏழை சலவைத் தொழிலாளர்களின் வீடுகளில் உள்ள குடும்ப சாமான்களை பறிமுதல் செய்யப்படுகிறது; இதை உடனடியாக விசாரித்து — அந்தக் கடன் தொகையை மானியமாக வழங்கி—ஏழை சலவைத் தொழிலாளர்களின் கண்ணீரைத் துடைக்கவேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களையும், அரிசன நலத் துறை அமைச்சர் டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்களையும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது"

என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அறிஞர் அண்ணா அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது; அறிஞர் அண்ணா அவர்கள், 'இந்த ஆட்சி, தொழிலாளர்களுக்காகவே நடைபெறுகிறபடியால் இதுபற்றி விசாரித்து ஆவன செய்கிறேன்' என்று தெரிவித்தார்கள்; அவர் கூறியபடி, தமிழகச் சட்டமன்றமேலவையில், 'தொழிலாளர்களுக்கு அளித்த கடன் தொகையை ரத்து செய்ய அரசாங்கம் முடிவு செய்கிறது' என்று அறிவித்தார்.

தி. மு. க. ஆட்சியில் கிடைத்துள்ள இந்த உதவி, கிராமங்களில் உள்ள சலவைத் தொழிலாளர்களுக்கு மறக்கமுடியாத பேருதவியாகும். இந்த உதவியினால் சலவைத் தொழிலாளர்களின் கண்ணீரைத் துடைத்த முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களையும், தி. மு. க. அரசையும் மனமார வாழ்த்தியும், நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறார்கள்"

# நெல்லிக்குப்பம் நகர தி. மு. கழகம்

## பொது உறுப்பினர் கூட்டமுடிவு

3—3—68 மாலை 3-மணியளவில் நெல்லிகுப்பம் தி.மு.கழக அவைத் தலைவர் சி. பாலவேளாயுதம் தலைமையிலும் கழக அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி., கடலூர் வட்ட செயலாளர் ஏ. வி. தண்டபாணி ஆகியவர்கள் முன்னிலையிலும் நகர தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது.

அதுபோது, நெல்லிக்குப்பம், நகராட்சியான பிறகு நகரக் கிளையின் செயற்குழு உறுப்பினர் எண்ணிக்கை 14-லிருந்து 20-ஆக உயர்த்தபடுவதால் தற்போதுள்ள 10 உறுப்பினர்கள் போக மேலும் 10 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வரும் நகராட்சித் தேர்தலில் கழகம் ஈடுபட்டு மேலமைப்புகளுக்கு விவரங்களைத் தெரிவிக்க வட்டச் செயலாளர் திரு. ஏ. வி. தண்டபாணி அவர்கள் உள்ளிட்ட ஐவர்குழு நியமிக்கப்பட்டது.

செயற்குழு உறுப்பினர்கள் தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்கு வரத்தவறினால் அவர்களுக்குத் தெரிவித்துவிட்டு செயற்குழுவிலிருந்து நீக்குவது என முடிவு செய்யப்பட்டது.

வரும் 6—3—68 அன்று கழக ஆட்சியின் ஓர் ஆண்டு சாதனைகளை விளக்கி நகரில் துண்டு அறிக்கை வெளியிடுவது நகரில் விழாவை சிறப்பாக நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

நகரச் செயலாளர் திரு. இரா. பாண்டுரங்கன் அவர்கள் நன்றி கூறினார்.

# திருக்குறள் சார்பு அமைப்புகட்கு வேண்டுகோள்

குருகுலம் திருக்குறள் நிலையத்தின் ஆண்டு நிறைவு விழா ஏப்ரல் 27-ம் நாளும், திருக்குறள் விழா ஏப்ரல் 28ம் நாளும் முறையே சென்னையில் நடத்த ஏற்பாடுகள் நடந்துவருகின்றன.

தமிழக தமிழ்ப் பேராசிரியர்களும், தமிழக அமைச்சர்களும் கலந்துகொள்ள இருக்கின்றனர்; விரிவான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

இத்தருணத்தில், தமிழகத்தில் திருக்குறள் பணிமனைகள் அனைத்தும்—அதாவது திருக்குறள் கழகம், மன்றம், படிப்பகம், நூல் நிலையம் முதலிய எல்லா அமைப்புகளுடைய முகவரிகளைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்தால் மேற்கொண்டு திருக்குறள் பணிகளை ஒருமுகப்படுத்தி வலிவும் பொலிவும் பெறச் செய்ய ஏதுவாகும்.

உடனே தங்கள் தங்கள் முகவரிகளை 'குருகுலம் திருக்குறள் நிலையம், சென்னைக் கிளை, 'தமிழகம் 27, பிள்ளையார் கோயில் தெரு, தண்டையார்ப்பேட்டை, சென்னை-21.' என்ற முகவரிக்கு அனுப்புமாறு வேண்டப்படுகிறார்கள்.

# அமெரிக்க —இரஷ்ய 'பக்தர்'களாக மட்டும் இருப்பது சரியா?

## இடது கம்யூனிஸ்டுகளுக்கு ஆதரவாக காங்கிரசு உறுப்பினர் சாப்ரு கேள்வி

சடந்த வெள்ளியன்று நாடாளுமன்றத்தில் பேசிய காங்கிரசு உறுப்பினரும் முன்னாள் நீதிபதியுமான பி. என். சாப்ரு, மார்க்சிய கம்யூனிஸ்டுக் கட்சிக்கு ஆதரவாகத் தெரிவித்திருப்பதாவது:—

"இந்திய அரசு மக்கள் சீனாவுடன் எப்போதுமே 'சண்டை பிடிக்கும் நிலை'யில்தான் தொடர்ந்து இருக்கப் போகிறதா—இதுதான் இந்த அரசின் கொள்கையா—என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதனால், நாட்டின் நல்வாழ்வுக்கு ஏதேனும் பயன் கிடைக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

"'அமெரிக்க பக்தர்'களாக—'இரஷ்யப் பக்தர்'களாக இருப்பதற்கு அனுமதிக்கப் படும்போது, ஏன் 'சீன பக்தர்'களாக இருப்பது மட்டும் வெறுக்கப்பட வேண்டும்?

"இடதுசாரி கம்யூனிஸ்டுகளை, 'சீன பக்தர்'கள் என்று ஏன் குற்றஞ்சாட்டப்பட வேண்டும்?"

# பாகிஸ்தானில் அமெரிக்க முதலீடுகள்

## இரு கை விரித்து வரவேற்கிறது அயூப்கான் அரசு

அமெரிக்கத் தனியார் துறை முதலீடுகளை ஏற்றுக்கொள்ள விருப்பம் தெரிவித்து—அனுமதி தரும் ஒப்பந்தம் ஒன்றில், பாகிஸ்தான், அடுத்த கிழமை கையெழுத்திட இருக்கிறது

"அமெரிக்கத் தனியார் முதலீடுகளுக்கு எல்லா வகையிலும் ஆதரவும், பாதுகாப்பும் தரப்படும்" என்று பாகிஸ்தான் வானொலி, இதுபற்றிய அறிவிப்பு ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறது.

பாகிஸ்தானின் கூட்டாளியான செஞ்சீனா, இதுவரையில், இந்தியாவில், அமெரிக்கத் தனியார் முதலீடுகளை அனுமதித்தது பற்றி, 'ஏகாதிபத்திய அடிவருடிகள்—அமெரிக்க ஏஜெண்டுகள்' என்றெல்லாம் விமர்சித்துவந்தது நினைவிருக்கலாம்!

இப்போது, தனது தோழமை நாடான பாகிஸ்தானே மேற்கொள்ளவிருக்கும் இந்த அமெரிக்க ஒப்பந்தம் பற்றி செஞ்சீனா என்ன சொல்லப் போகிறது என்பதனை அறிய அரசியல் பார்வையாளர்கள் ஆவலுடன் இருக்கின்றனர்!

# நாக்குடையானில் என். வி. நடராசன்

## பொதுக்கூட்டத்தில் பங்கேற்பு

திருத்துறைப்பூண்டி வட்டம்—நாக்குடையான் தி.மு.க. சார்பில் 11—3—68 இரவு 8 மணியளவில், தோழர் கோவிந்தசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் வே. கோதண்டபாணி, தோப்புத்துறை யூசுப், சிவ. கனகசுந்தரம், ப. முருகு எம்.ஏ. ஆகியோர் பேசினர்.

இறுதியில், அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம் எல்.சி. அவர்கள், தமிழக அரசின் சாதனைகள் குறித்து விளக்கவுரையாற்றினார்.

திருச்சி வள்ளுவர் கலை மன்றத்தாரின் மதன் – மாலா குழுவினரின் 'எங்கள் சாதனை' கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

# செம்போடையில் கழக ஆட்சி ஆண்டு விழா

செம்போடை தி.மு.க. சார்பில் கழக ஆட்சியின் ஓராண்டு நிறைவு விழாப் பொதுக்கூட்டம் 15-3-68 அன்று தோழர் முருகையன் தலைமையில் நடைபெற்றது.

கழக அரசின் சாதனைகள் குறித்து தோழர்கள் வீரமணி, பெருமாள், கே. வி. எஸ். மணி, சா. குமரவேல், வே. கோதண்டபாணி, தோப்புத்துறை செ. யூசுப் ஆகியோர் பேசினர். தலைவர் நன்றி நவின்றார்.

# காரைக்குடியில் கழக ஆட்சி ஆண்டு விழா

காரைக்குடி 4-வது வட்ட கலைவாணர் நினைவு மன்றச் சார்பில் 11—3—68 அன்று தி. மு. க. ஆட்சியின் முதலாம் ஆண்டு நிறைவு விழா, தோழர் பா. மு கலைமணி தலைமையில் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

பொதுமக்களுக்குச் சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது.

# செட்டிபாளையம் எம். ஜி. ஆர். மன்றத் துவக்க விழா

போத்தனூர் அடுத்துள்ள செட்டிபாளையத்தில் 9—3—68 மாலை 7 மணிக்கு எம் ஜி. ஆர். மன்றத் துவக்க விழாவும், அண்ணா அமைச்சரவை முதலாண்டு நிறைவு விழாவும் தோழர் திரு. ந. ப. சன்முகம் தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் கேரள சுந்தரம், வை. கோபாலகிருட்டினன் ஆகியோர் பேசினர். திரு. ம. இராம கிருட்டிணன் நன்றி கூறினார்.

# குற்றவாளிகளைத் திருத்தும் நிலையமாகச் சிறைச்சாலை

## மேற்கு ஜெர்மனியில் ஒரு புதிய ஏற்பாடு

சந்தர்ப்பம், சூழ்நிலை காரணமாக சிறிய குற்றங்களைச் செய்து அகப்பட்டுக்கொள்கிறவர்களைச் சிறையில் அடைத்தால், அவர்களின் மனம் 'கல்'லாகிவிடக்கூடும்; மென்மேலும் பெரிய குற்றங்களில் ஈடுபடுவார்கள்.

ஆரம்பத்திலேயே சிறிய குற்றவாளிகள் தங்கள் தவறுகளை உணர்ந்து திருந்தி, சமுதாயத்தில் புதிய வாழ்வு தொடங்க வாய்ப்பு அளிக்கவேண்டியது அவசியம்.

மேற்கு ஜெர்மனியில் இது தொடர்பாகப் புரட்சிகரமான திட்டம் பரிசோதனை செய்யப்படுகிறது. சிறிய குற்றங்களுக்காகச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறவர்கள், சிறைக்கூடத்தில் இரவில் மட்டும் அடைக்கப்படவும், பகலில் 'சுதந்தர மனிதனாக'த் திரியவும் அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்கள் 'மறுவாழ்வு' பெற இது வாய்ப்பு அளிக்கிறது.

"பொதுநல ஆட்சி நடைபெறுகிற மாநிலத்தில், சிறிய குற்றங்கள் செய்தவர்கள் திருந்தி, சமுதாயத்தில் மீண்டும் 'பொறுப்புமிக்க' உறுப்பினராகச் செயல்பட வாய்ப்பு அளிக்கும்வகையில், தண்டனை அமைந்திருக்க வேண்டும்" என்று பல்வேறு சட்ட நிபுணர்கள்—மருத்துவ நிபுணர்கள்—மனோதத்துவ நிபுணர்கள் கூறிவந்திருக்கிறார்கள்; இதற்கேற்ப, சிறைக் கதவுகளின் 'பிடி'யைத் தளர்த்த மேற்கு ஜெர்மனியில் உள்ள ஒரு மாநில அரசின் நிதியமைச்சர் ஏற்பாடு செய்திருக்கிறார்.

அமைச்சரின் திட்டப்படி 'அரையளவு திறந்த — வெளிச்சிறை' உருவாக்கப்படுகிறது. இதன்படி, குற்றவாளி இரவு நேரத்தில், இரும்புக் கம்பிகளுக்குப் பின்னால் சிறையில் இருக்கவேண்டும். பகல் நேரத்தில் சுதந்தரமாகச் சிறைக்குள்ளேயே வெளியே இருக்க அனுமதிக்கப்படுகிறார்.

பகலில் மற்ற குடிமக்களைப் போல அவர், தன்னுடைய வேலையைத் தொடர்ந்து செய்யலாம்; இரவில் சிறைக்குத் திரும்பிவிட வேண்டும்.

'இரவில் சிறை—பகலில் வேலை' என்ற இவரது இரட்டை வாழ்வினைப் பிறசாக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது; இதன் மூலம், சமுதாயத்திலிருந்து புறக்கணிக்கப் பட்டவராக அவர் உணரமாட்டார்; மீண்டும் வழக்கமான வாழ்க்கையை எளிதில் மேற்கொள்ள இதனால் வசதிப்படுகிறது.

"குற்றவாளிகள் ஒரேயடியாக சிறையில் தண்டனையை அனுபவிக்கும் காலத்தில் இருப்பதைவிட, பகலில் வேலை செய்தும், இரவில் தண்டனையை அனுபவிக்கும்போது மன உளைச்சல் படுகிறார்கள்" என்று சொல்லப்படும் கருத்தை அமைச்சர் ஏற்கவில்லை.

கொடிய குற்றவாளிகளுக்கு இப்புதிய 'திறந்தவெளி சிறைத் திட்டம்' பொருந்தாது.

பகலில் சுதந்தரமாக வெளியே விடப்பட்ட 60 சிறைக் கைதிகளில் இருவர் மட்டுமே தப்பி ஓட முயன்றார்கள்.

சிறைக் கைதிகளுக்குப் பகலில் சுதந்தரமாக நடமாட அனுமதி அளிப்பதுடன் அமைச்சர் திருப்தி கொள்ளவில்லை; வசதியான தொழிற்சாலைகளில் அவர்களுக்கும் வேலை கிடைக்க வேண்டுமென விருப்புகிறார். அப்போதுதான் நிம்மதியாக அவர்கள் வேலை செய்துகொண்டிருப்பார்கள். 'சிறைக்குப் போனவர்' என்ற உறுத்தலும், போதுமான தொழில் திறன் இல்லாததும், இவர்கள் சீரான வாழ்க்கை தொடங்க இடையூறாக இருக்கும் என்று அமைச்சர் கருதுகிறார். இப்புதிய சிறைச் சீர்திருத்தத் திட்டம், சிறு குற்றவாளிகளுக்குப் பல புதிய வாய்ப்புகளை அளிக்கிறது.

# அரவக்குறிச்சி ஒன்றியத்தில் சீரணிப் பணி

20—3—68 காலை 10 மணியளவில் அரவக்குறிச்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மோளையாண்டிபட்டியில், சிறுர்களுக்கான பூங்கா அமைக்கும் பணியினை, ஒன்றியத் தலைவர் திரு, பெ. கஸ்தூரி தலைமையில் திரு. பூ. ச. தண்டபாணி துவக்கிவைத்து, சீரணியின் நோக்கம் குறித்து விளக்கம் தந்து பேசினார்.

ஆணையர் திரு. நரசிம்மன், பள்ளப்பட்டி கி. அ. மு இசாக் (இடது கம்யூ). சீரங்கராயன் (தி மு.க.), சீ. அரங்கசாமி (காங்) ஆகியோர் பேசினர்.

கிராம மக்கள், உணவு—இளநீர் முதலியன கொடுத்து உற்சாக மூட்டினர்.

அனைத்துக் கட்சிக்காரர்களும் இப்பணியில் ஈடுபட்டிருப்பது ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

# திராவிட மொழிகளை ஈன்ற மொழி!

## கன்னட இலக்கிய ஆசிரியர் தரும் தகவல்

"கன்னட மொழியும் அதன் எழுத்துக்களும், தெலுங்கு மொழியைக் காட்டிலும் தொன்மையானவை!

"கன்னட—தெலுங்கு—தமிழ்—மலையாளம் இன்னும் 20 திராவிட இன மொழிகள், 'புரோதா' என்னும் திராவிட மொழியினின்றும் பிறந்தவை; எனவேதான், இந்த மொழிகளின் வேர்ச் சொற்களிலும், இலக்கணத்திலும், வாக்கிய அமைப்பிலும், சொல்லமைப்பிலும், உச்சரிப்பிலும் இந்த அளவு ஒற்றுமை காணப்படுகிறது"

என்று, கன்னட இலக்கியக் கழகத்தின் செயலாளரான எச். பி. நாகராசையா என்பவர் கூறியிருக்கிறார்.

# 'பாரத அன்னை'யால் மறக்கப்பட்ட குழந்தைகள்!

## கருநாடக அமைச்சர் குமுறல்

"கருநாடக மாநிலத்திற்கும்—ஆந்திர மாநிலத்திற்கும் இடையே கிருஷ்ணா நதித் தண்ணீர் குறித்து எழுந்துள்ள சிக்கலை நடுவர் குழு ஒன்றிற்கு அனுப்பும்படி இந்த மாநில அரசு எவ்வளவோ வேண்டிக்கொண்டது; இதனையெல்லாம் மத்திய அரசு புறக்கணித்துவிட்டது.

"நம்முடைய கடிதங்களுக்கு அவர்கள் பதில் அனுப்பாதது இருக்கட்டும்; 'வந்து சேர்ந்தது' என்ற அறிவிப்பைக்கூட அவர்கள் அனுப்பவில்லை! 'கருநாடக மாநிலம் இந்தியாவின் பகுதி' என்பதையே மத்திய அரசு மறந்துவிட்டது போலத் தெரிகிறதே!"

"கிருஷ்ணா நதிப் பள்ளத்தாக்கில் வாழும் மக்களை, டில்லி அரசு, 'பாரத அன்னை'யின் குழந்தைகளாகக் கருதுவதில்லை என்று தெரிகிறது. அட்வகேட்-ஜெனரலிடம் கூறி, மத்திய அரசின்மீது இது தொடர்பாக வழக்குத் தொடருவதுபற்றி மாநில அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது"

என்று கருநாடக மாநில பொதுப் பணித் துறை அமைச்சர் வீரேந்திர பாட்டில் கூறியிருக்கிறார்.

என்றும்போல்

# அள்ளி வழங்குவீர் கழக நிதி!

அன்புடையீர்!

எனக்கு வழக்கமானதும், தங்கள் அனைவருக்கும் பழக்கமானதுமான இந்த வேண்டுகோளைத் தங்களுக்கு விடுக்கிறேன்.

கழகத்திற்குத் தொடர்ந்து தேவைப்பட்டுக் கொண்டிருக்கும் நிதியை அனுப்பி உதவுமாறு கழகம் கேட்டுக்கொள்ளும்போதெல்லாம், கொடுத்துக் கொடுத்து கை சிவந்தும், உள்ளம் மலர்ந்தும், உவகைக்குரிய கழகச் சாதனைகளை கண்டு கண்டு களித்துக்கொண்டிருக்கும் தங்களுக்கு நான், 'கழகப் பொருளாளர்' என்ற முறையில் இந்த வேண்டுகோளை விடுப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

கழகத்திற்கு அளிக்கப்படும் நிதி--ஒவ்வொரு காசும்--ஓராயிரம் நன்மைகளைத் தென்னகத்து அரசியலில் தழைக்கச் செய்வதை நாடு அறியும்! நல்லோர் பாராட்டுகின்றனர்!

கழகம் நிதி கேட்கத் தயங்கியதில்லை—தாங்களும் கழகம் கேட்டபோது நிதி கொடுக்கத் தயங்கியதில்லை! இந்தச் சுழற்சி, மீண்டும் இப்போது நம்மிடையே நிகழ்வது கழகத்திற்குத் தவிர்க்க முடியாதது--தங்கள் அனைவராலும் தட்டிக்கழிக்க முடியாதது!

தென்னகத்து நலன்களைக் காப்பதில் கழகமும், அதன் ஒப்பற்ற தலைவர் அறிஞர் அண்ணா அவர்களும் இமயம்போல் உறுதியாக இருப்பதை அனைவரும் அறிவர்! அந்த இமயத்தையே உறுதியாகத் தாங்கிக்கொண்டிருக்கும் நிலத்தைப் போன்று நிலவிவரும் தங்களுடைய தொடர்ந்த ஆதரவை எண்ணி, கழகம் பூரித்துக்கொண்டிருக்கிறது!

**கழகம் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்ததற்குப் பிறகு அதன் உழைப்பும் பொறுப்பும் அதிகமாகிவிட்டதைப் போலவே, அதனை உயர்த்திப் பெருமைப்படும் தங்களுக்கும், ஆதரவு அளிப்பதன் அளவும் பொறுப்பும் அதிகமாக ஆனதை கழகம் பணிவோடு நினைவூட்ட விரும்புகிறது!**

அறிஞர் அண்ணா அவர்களின் அனுமதியோடு என்னுடைய வேண்டுகோள் எத்தகு சந்தர்ப்பத்தில் தங்களிடையில் ஒலிக்கும் என்பது, தாங்கள் அறியாததல்ல!

**வலியோர் எளியோரை வதைக்கும்போது—**

**அரசியல் மாச்சரியம் அநாகரிகமான முறையில் கழகக் கண்மணிகளின் உயிரைப் பறித்தபோது—**

**ஏழைகளின் கண்ணீரைத் துடைத்தெறியக் கழகம் பொறுப்பேற்றுத் துடித்தபோது—**

**கழகத்தின் உயிர்நாடியும் உன்னத இலட்சியமுமான சனநாயகம் காப்பாற்றப்படுவதற்குத் தேவையான செலவுக்குப் பணம் திரட்டுமாறு கழகம் கட்டளையிட்டபோது—**

**என்னுடைய வேண்டுகோள் தங்களுடைய இதயம் நோக்கிப் பாய்ந்தோடி வரும்!**

இப்போது கழகம் நிதி கேட்டு வேண்டுகோள் விடுக்கிறது.

**நாட்டில் எஞ்சி -- மிஞ்சியுள்ள ஆணவமும்—**

**'எடுத்தேன்—கவிழ்த்தேன்' என்ற போக்கும்—**

**'ஏழைகளால் எது முடியும்' என்று கேட்கும் பூர்ஷ்வாப் புரட்டும்—**

மேலும் முறியடிக்கப்படவேண்டிய ஓர் வாய்ப்பு அண்மையில் வருவதைக் கழகம் உணருகிறது.

**ஆம்; தமிழகத்தின் நகராட்சி—மாநகராட்சித் தேர்தல்கள் நெருங்கிக்கொண்டிருக்கின்றன! தென்காசி இடைத் தேர்தல் வேறு!**

**தமிழகத்தின் சனநாயகப் பணி முழுமைபெற—எங்கும், எதிலும் 'சனநாயகம் வெற்றிபெற்றது' என்பதைக் கண்டு திருப்திபெற—வரும் நகராட்சி, மாநகராட்சித் தேர்தல்கள், சிறந்ததோர் திருப்பு முனையாகும்! கழகக் கண்மணிகளின் செயல் திறமையின் அற்புதத்தை விளக்குவனவாகும்!**

"உள்ளாட்சித் தேர்தல்களில் அரசியல் புகக் கூடாது—புகுவதற்கு அனுமதிக்கக்கூடாது" என்பதை ஆண்டாண்டுக் காலமாகக் கழகம் ஒலித்துக் கொண்டு வந்தாலும், அது, காங்கிரசுக் கட்சியால் செவிசாய்க்கப்படவில்லை!

கழகம் தெரிவித்த கருத்துக்களும், செயல் முறைத் திட்டங்களும்—உள்ளாட்சித் தேர்தல்களைப் பொறுத்து—காங்கிரசுக் கட்சியால் மறுக்கப்பட்டு விட்டன!

கழகம் ஆட்சிப் பொறுப்பேற்று—அதிகமான வலிவினைப் பெற்றபிறகு இதனை உணர்த்தியபோதும், காங்கிரசு இணங்கிவரக் காணோம்!

பொருளாளர்

## கருணாநிதி வேண்டுகோள்

ஆகவே, நகராட்சி—மாநகராட்சித் தேர்தல்களை, கழகம், கட்சி அடிப்படையிலேயே சந்திக்கத் தயாராகி இருக்கிறது.

கட்சி அடிப்படையில் சந்தித்த அத்தனைக்கும் நிதி கொடுத்து உதவிய தங்கள் அனைவரையும், இந்தப் பணிக்கும் நிதி அனுப்பிக் கொடுக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற ஓராண்டுச் சாதனைகளை அண்மையில் தாங்கள் புகழ்ந்தீர்கள்! 'இத்தனைக் குறுகிய காலத்தில் -- இவ்வளவு சிறக்கத் தொண்டாற்றிய தூய உள்ளம்படைத்த அமைச்சரவை எதையாகிலும், நினைவுகூர்ந்து சொல்லுங்கள் பார்க்கலாம்' என்று மாற்றுக் கட்சியினரைப் பார்த்து மார்தட்டி, மகிழ்ச்சி பொங்கக் கேட்டீர்கள்—நன்றி!

**ஆனால், கழகத்தின் நிதி நிலைமை, சாதனையின் அளவை எட்டாமல் தேங்கிவிட்டதையும் தாங்கள் அறிவீர்கள்!**

கழகத்தின் பொறுப்பும், செலவுகளும் அதிகமாக ஆனதைப்போல், வரவுக்கான வாய்ப்புக்கு வசதிகள் குறைந்துவிட்டன!

இந்த நிலையில், கழகத்தின் சனநாயகக் கடமையாற்ற வேண்டியிருக்கும் நகராட்சி—மாநகராட்சித் தேர்தல்களும் நெருங்குகின்றன!

## இடைத் தேர்தல்-- நகராட்சித் தேர்தல்கள்

## தேர்தல் நிதி

கடந்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு, கழகச் சார்பில் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, 'இடைத் தேர்தல்—நகராட்சித் தேர்தல் நிதி'யாகக் கிடைத்த தொகை பற்றிய விவரங்கள் அவ்வப்போது மாவட்ட வாரியாகக் கழக இதழ்களில் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவற்றின் தொடர்ச்சியாக இனித் தொடர்ந்து வெளியிடப்படும்.

5—12—67 இதழில் மாவட்டவாரியாக வெளியிட்ட கணக்கு விவரப்படி :-

| | | |
|---|---|---|
| | | ரூ. 1,15,483.42 |
| இராமநாதபுரம் மாவட்டச் சார்பாக செயலாளர் எஸ். எஸ். தென்னரசு மூலம் | | ரூ. 5,000.00 |
| நெல்லை மாவட்டச் சார்பாக செயலாளர் எம். எஸ். சிவசாமி அவர்கள் மூலம் | | ரூ. 636.00 |
| சேலம் மாவட்டச் சார்பாக— எஸ். எஸ். எம். சுப்பிரமணியம் மூலம் | ரூ. 5,000.00 | |
| எஸ். சண்முகம் அவர்கள் மூலம் | ரூ. 5,500.00 | |
| சேலம் நண்பர்கள்மூலம் | ரூ. 500.00 | |
| குச்சிப்பாளையம் தோழர் கந்தசாமி | ரூ. 100.00 | |
| சேலம் தோழர் ஆர். வி. கணபதி | ரூ. 15.00 | 11,115.00 |
| சேலம் நகர சிறப்புக் கூட்டத்தில் வசூலான தொகையில் மீதம்—மாவட்டச் செயலாளர் இ. ஆர். கிருஷ்ணன் மூலம் | | ரூ. 10,000.00 |
| கடையநல்லூர் தி. மு. க.—எஸ். முத்து எம். எல். சி. அவர்கள் மூலம் | | ரூ. 51 00 |
| பெரியகவுண்டன்பாளையம் தோழர் காந்தி | | ரூ. 101.00 |
| குலாநல்லி தி மு.க. | | ரூ. 18 00 |
| கள்ளக்குறிச்சி அண்ணா மன்றச் சார்பில் நடைபெற்ற குமாரி விஜயா நிகழ்ச்சியில் வசூல் | | ரூ. 11.02 |
| 'நம் நாடு' அலுவலகத் தோழர் குப்புசாமி | | ரூ. 5.50 |
| டி. கல்லுப்பட்டி ம. ந. அய்யாசாமி | | ரூ. 2.00 |
| பெங்களூர் எஸ். அருணாசலம் | | ரூ. 1.00 |
| | | **1,42,418.94** |

நிதி அனுப்பவேண்டிய முகவரி :—

**மு. கருணாநிதி, பொருளாளர் தி.மு.க., 'அறிவகம்', சென்னை-13.**

**ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தபிறகு, சட்டமன்றத்தில் இலட்சக்கணக்கில் மிகுதியாகும் வரவு-செலவுத் திட்ட அறிக்கையைக் கழகம் தயாரித்து அளித்தாலும்—கோடிக்கணக்கில் சட்டமன்றத்தில் தொகை சொல்லி அறிவித்தாலும், ஓரிரு காசு -- ஐந்து காசு -- பத்துக் காசு என்ற விதத்தில்—தங்கள் உழைப்பினால் உரமேறிய கரத்தின் வியர்வை ஈரம் படிந்து—கழகத்திற்கு நிதியாகக் கிடைப்பதையே பெரும் பேறெனக் கருதுகிறோம்!**

**ஆயிரக்கணக்கில் ஒரே நபரிடத்திலிருந்து கழகத்திற்கு நிதி கிடைப்பது, என்றும் நடைபெற்றதில்லை! இனியும் அப்படிக் கிடைப்பதை, கழகம் எதிர்பார்க்கவில்லை—விரும்பவுமில்லை! அளிக்கும் சிறு சிறு தொகையோடு, இழைந்தும் இணைந்துவரும் இதய அன்பும் ஆதரவுமே என்றுமே கழகத்தின் நிறைவான கருவூலமாகும்!**

"அமிழ்தினும் ஆற்ற இனிதே; தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"

என்று வள்ளுவன் யாத்த குறள், தம் மக்கள் அருங்கை நீட்டி முறுவல் பூக்கக் கொடுக்கும் சிறு தொகையையே பெருநிதியாகக் கொள்ளும் கழகத்தின் நிதிக் கோரிக்கைக்கும் பொருந்தும்!

ஆயிரத்திலும், நூற்றிலும் காணும் வசதியைவிட, தங்களுடைய,

**வியர்வை ஈரம் படிந்த கைகள்—**

**உழைத்துழைத்து முறுக்கேறிய கரங்கள்—**

**நல்லனவன்றி, அல்லனவற்றிற்கு நீளாத கரங்கள்—**

**பிறர்க்குக் கொடுக்க அலட்டிக்கொள்ளாத கைகள்—**

**அரசியலில் அநீதி —ஆணவம்— நயவஞ்சகம் — பொய்மை — அடிமைத்தனம்— ஆகியவைகளை, நேரம் வந்துற்றபோது அடியோடு வெட்டிச் சாய்க்கும் வாக்குச் சீட்டை வைத்திருக்கும் கரங்கள்—**

**பூரிப்போடு மனமுவந்து அளிக்கும் நிக்கல் காசுகளே, கழகம் கண்களில் ஒற்றி ஏந்திக்கொள்ளும் பொற்காசுகளாகும்!**

ஆங்காங்குள்ள கழக அமைப்புக்களின் நிர்வாகிகளும், தோழர்களும் வழக்கம்போல் சிறு சிறு தொகைகளாகச் சேர்த்துத் தலைமைக் கழகத்திற்கு அனுப்புமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

நகராட்சி—மாநகராட்சித் தேர்தல்கள், தென்காசி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் ஆகியவற்றில் பெரும் வெற்றியைக் குவிக்கவேண்டிய அவசியம் கழகத்திற்கு வேறு எப்போதையும்விட இப்போது அதிகமாகி இருக்கிறது.

அரசின் சாதனைகளை மெருகேற்றி, அதன்பால் மக்களுக்குள்ள பிணைப்பை வெளியில் பெருமளவு எதிரொலிக்கப்போவது இந்தத் தேர்தல்களின் வெற்றியே ஆகும்.

கழகத்தில், 'தேர்தல் நிதி' என்று கணிசமாகவே ஒரு தொகை நிரந்தரமாக இருத்தல் வேண்டும்—என்பதை அறிஞர் அண்ணா அவர்கள் அவ்வப்போது எடுத்துச்சொல்லி வந்ததும், தற்போது நம்மால் நினைவுகூரத்தக்கதாகும்.

**ஆகவே, பொதுத் தேர்தலின்போது வெளிப்படுத்திய ஆர்வத்தின் அடிப்படையிலேயே இப்போதும் தேர்தல்களுக்கான நிதியைத் திரட்டி அனுப்பியும்—தனிப்பட்ட முறையில் உவந்தளித்தும் உறுதுணைபுரியுமாறு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.**

**நாட்கள் நெருங்கிக்கொண்டிருக்கின்றன!**
**நமது கடமைகளும் மிகுந்துவிட்டன!**

**"சனநாயகத்தின் மாண்பு, நாடு நெடுகிலும்— எங்கும் எதிலும் மிகுந்து ஒளிவீச வேண்டும்"**

என்று நாம் விரும்பி எதிர்பார்ப்பதற்குரிய 'விலை'யை ஒவ்வொருவரும் கழகத்திற்கு நிதி அனுப்புவதன் மூலம் செலுத்துங்கள்.

**நகராட்சி — மாநகராட்சித் தேர்தல்களில் கழகம் காணும் வெற்றி, சனநாயகத்திற்கு நாம் சூட்டும் மற்றொரு மணிமகுடம்—என்பதை மறவாதீர்கள்!**

**நிதி தாருங்கள்! இந்த நாட்டின் சனநாயகத்தைக் காப்பதற்கு உறுதுணையாக நில்லுங்கள்!**

'அறிவகம்'
சென்னை-13.
23—3—'68.

அன்பன்
**மு. கருணாநிதி**
பொருளாளர், தி. மு. க.